considerations. May I know why the Techno Economic Survey Feasibility Report should stand in the way of starting of the project?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்படி இன்னொரு அறிக்கை தயாராகும் முகத்தான் இந்த உருக்காலைத் திட்டம் காலதாமதப் பட்டதோ என்ற அச்சம்தான் இந்தக் கேள்விக்குப் பின்னால் இருக்கிறது என்று நம்புகிறேன். அந்த உணர்ச்சியைப் பாராட்டு கிறேன். மத்திய அரசாங்கம்தான் காலதாமதப்படுத்துகிறது. 1964 விளக்க அறிக்கை 1971-72-ல் நிறைவேற்றும்போது அதை அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். அதை ஆதரிக்கின்றோம். எப்படியாவது விரைவிலே வந்தால் பாராட்டு வோம்.

### நிலவள வங்கிகளிலிருந்து கடன்கள்.

* 44 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நில அடமான பாங்குகளில், தனி நபருக்கு வழங்கப் படும் கடன் தொகையின் உச்ச அளவு என்ன?

(இ) இதை அதிகரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :**

(அ)

| கடன் வழங்கும் நோக்கம் | உச்ச அளவு |
|---|---|
| | ரூ. |
| 1. டிராக்டர் வாங்க | 40,000 |
| 2. கிணறு வெட்ட | 35,000 |
| 3. பம்பு ரூம் கட்டுவதற்கும் மோட்டார் பம்பு செட் வாங்கவும் | 5,000 |
| 4. கிணறு ஆழப்படுத்த | 10,000 |
| 5. நிலச் சீர்திருத்தம் | 5,000 |

(இ) இல்லை.

**திரு. சு. துரைசாமி :** அமைச்சரவர்கள் குறிப்பிட்ட இந்த ரூ. 40,000 என்பது கோவை மாவட்டத்திற்குப் போதுமானதாக இல்லை. இதை அதிகரிக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** உறுப்பினர் அவர்கள் கருத்தை இந்த அரசு கவனித்து பரிசீலிக்கும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** இந்த ஸ்டேட் டெவலப்மெண்டு பாங்கு திட்டமிட்டபடி செலவு செய்து இருக்கிறதா? அப்படி இல்லையானால், அதற்குக் காரணம் என்ன? நிர்வாகச் சிக்கலா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் கோரியபடி இந்த நிலவள வங்கியின் மூலம் எவ்வளவு தொகை கொடுக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டதோ அந்தக் தொகை கொடுக்க முடியாமல் போய்விட்டது. ரிசர்வ் பேங்கிலிருந்து எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று சம்மதித்து இருந்தார்களோ அவ்வளவையும் நாம் கொடுக்க முடியவில்லை. ஆகையால் ரிசர்வ் பேங்கிலிருந்து இப்போது கமிட்மெண்ட் சார்ஜ் என்று ஒரு பர்சண்ட் கேட்டிருக்கிறார்கள். அதைக் கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். குறித்த அளவு கடன் கொடுக்க முடியவில்லையென்று அறிந்து அதற்கான நடவடிக்கை களை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. காதர் பாஷா என்ற வெள்ளைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிலவள வங்கியில் கடன்கள் வாங்குகிற நேரத்தில் கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அவர்கள் குறித்த விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. அந்தக் கடன் 5 ஆண்டுக் காலத்தில் பதிவு செய்யப்பட்ட தொகையில் மதிப்பீட்டின்படி கொடுக்கப்படுகிறது. இந்த 5 ஆண்டுக் காலத்தில் பத்திரங்கள் பதிகிற நேரத்தில் நிலத்தின் மதிப்பு குறைந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியின் ரூபத்தில் ஒரே வரியில் கேள்வியைப் போட வேண்டும்.

**திரு. காதர் பாஷா என்ற வெள்ளைசாமி :** அரசு மதிப்பீட்டின் படி கைடு லைன்ஸ் என்கிற முறைப்படி லோன் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தற்போது உறுப் பினர் அவர்கள் கோரியபடி அரசு ஏற்கெனவே கைடு லைன்ஸ் என்று நிர்ணயித்து ஒவ்வொரு கிராமத்துக்கும் எவ்வளவு என்று திட்டமிட்டிருக்கிறது. நிலம் என்ன மதிப்பு என்பதற்கு கைடு லைன்ஸ் இருக்கிறது. அதிலே இப்போது மாறுதல் செய்யப் படுகிறது.

**திரு. அ. ஆறுமுகம் :** தலைவரவர்களே, இப்பொழுது நிலவள வங்கிகளில் தரப்படுகின்ற கடன் புதிய கிணறு வெட்டவும், பழைய கிணறை ஆழப்படுத்தவும் கொடுக்கின்றார்கள். அதே கடனை நிலத்தைச் சீர்திருத்தவும் தாங்கள் வாங்கிய பழைய கடனைக் கட்டாமல் இருக்கும்பொழுதே, புதிய கடனை வழங்க அரசாங்கம் யோசனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அது அடுத்த ஆண்டு கவனிக்கப்படும்.

**திரு. ந. நாச்சியப்பன் :** பேரவைத் தலைவரவர்களே, தற் பொழுது கடன் உதவிகளைப் பரிசீலிப்பதற்கு 2 அல்லது 3 வங்கி களுக்கு ஒரு சி.எஸ்.ஆர். என்றிருக்கிறார்கள். அவர்கள் மாதம் ஒன்றுக்கு அறுபது கடன் மனுக்களைத்தான் பார்த்து முடிவு

[1971 ஜூன் 24

செய்ய முடிகிறது. இதனால் காலதாமதம் ஆகிறது. எனவே, ஒவ்வொரு நிலவள வங்கிக்கும் ஒரு சி. எஸ். ஆர். என்று அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சி.எஸ்.ஆர் கள் இப்பொழுது செயல்படுவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. இதனால் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை நான் உணருகிறேன். ஆயினும், பல நூற்றுக்கணக்கான ரூபாய்களை சம்பளமாகக் கொடுத்து அதிகாரிகளை அதிகப்படுத்தாமல் இருக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

திரு. மு. சின்னசாமி : தலைவரவர்களே, எல்.எம். பாங்குகளிலே லோன் கொடுக்கும் பொழுது நீண்ட காலம கழித்துக் கொடுக்கிறார்கள். காரணம், சி.எஸ்.ஆர். போன்றவர்கள் இடத்திற்குச் சென்று பார்த்துவர காலதாமதம் ஆகிறது. எனவே, ஒவ்வொரு எல்.எம். பாங்கிகளுக்கும் ஒரு ஜீப் இந்த அரசாங்கம் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கூட்டுறவுத் துறையிலே சில அதிகாரிகளுக்கு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கின்றது. லோன் கொடுக்கக் காலதாமதம் ஆவது சி.எஸ்.ஆர். களுக்கு ஜீப் கொடுக்கப்படாததால் அல்ல. வேறு சில காரணங்களினால்தான் இந்தக் கால தாமதம் ஏற்படுகிறது.

திரு. கே. ரங்கநாதன் : மோட்டார் பம்ப் செட் சப்ளை செய்கின்ற பெரிய கம்பெனிகளிடத்திலே இருந்து குறைந்த கமிஷனும். சிறிய கம்பெனிகளிடத்திலே இருந்து அதிகக் கமிஷனும் வாங்குவது உண்மையா? அதற்கான முறையீடு இந்த அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அப்படிப்பட்ட முறையீடு வந்திருக்கிறது. அவர்கள் சொன்ன வேறுபாடுப்படி, அதாவது பெரிய கம்பெனிகளிடத்திலே இருந்து குறைந்த கமிஷனும், சிறிய கம்பெனிகளிடத்திலே இருந்து அதிகக் கமிஷனும் வாங்குவது என்பதற்கு இந்த அரசு சம்மதம் கொடுக்கவில்லை அரசு சம்மதம் இல்லாமல் சில காரியங்கள் இப்படி நடந்து விடுகின்றன. அவைகளை எல்லாம் ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுப்போம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த நிலவள வங்கிகளிலே தனி நபர் கடன் வாங்குவதற்கு 40,000 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதே சமயத்தில் முன்பு வாங்கிய கடனை கட்டியதற்குப் பிறகு தான் புதிய கடனைப் பெறவேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது. எனவே, முன் கடனைத் தீர்ப்பதற்கு சில சமயங்களிலே பின்னால் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. முன் கடன், தீர்ப்பதற்கும், முந்திய அரசாங்கம் கடன் இருந்தாலும். மேலும் கடன் தர வழி வகைகளை இந்த அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : முன் கடனைத் தீர்ப்பது என்பது பற்றி நாம் அடிக்கடி இந்த அவையிலே பேசியிருக்கிறோம். அதற்காகத் திருத்த சட்டத்தையும் கூட நிறைவேற்றி

1971 ஜூன் 24]

யிருக்கிறோம். நிலத்தை வளப்படுத்த முன்னுல் கடன் பெற்றிருப் பார்களானுல், அந்தக் கடனைத் தீர்க்க மறு கடன் கேட்டால், அதை வழங்க நிலவள வங்கிகளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறோம். ஆனுல், முன் கடன் கல்யாணம் போன்ற குடும்பச் செலவு களுக்காகப் பெற்றிருந்தால், அதைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு நிலவள வங்கிக்குக் கிடையாது. அப்படிப்பட்ட கடன்களைத் தீர்க்க அர்பன் பாங்க் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சில நிலவள வங்கிகள் பல நாடகளாகச் செயலற்ற முறையில்இருக் கின்றன. யாருக்கும், பங்குதாரர்களுக்கும் கூட எந்தவிதமான கடனும் கொடுக்கவில்லை. அந்த மாதிரியாகச் செயலற்று இருக் கின்ற வங்கிகளையும், அதன் கமிட்டிகளையும் "சூப்பர்சீடு" செய்ய இலாக்கா நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : புதிதாக அமைக்கப் பட்டிருக்கும் நிலவள வங்கி நிர்வாகிகள் ஒழுங்காகச் செயல்படா விட்டால், அவர்களை நீக்கிவிட்டு, வேறு நிர்வாகிகளைப் போட்டு விடலாம். இதை வங்கிகளை சூப்பர்சீட் செய்யாமலே செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கிணற்றை ஆழப்படுத்த லோன் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கிணறு ஆழப்படுத்தப்பட்டதா என்று பார்க்கப் போகின்ற அதிகாரி கிணற்றிலே இறங்கி பார்க்கிருரா அல்லது அப்படிப் பார்ப்பதற்கு அவருக்கு ஏதாவது கருவி கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : கிணறு ஆழப் படுத்துவது பற்றி அடுத்த கேள்வியில் வருகிறது. ஆனுல், கனம் உறுப்பினர் அவர்கள் முன்கூட்டி ஆழம் பார்த்துவிட்டார்கள். அடுத்து வருகின்ற கேள்விக்குத் துணை கேள்வியாக கேட்டால் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*45 வினு—திரு. என் மருதாசலம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலவள வங்கிகளில் விவசாயிகள் கிணறு அடிவெட்டு, நில அபிவிருத்திப் பணிகள் செய்ய தற்போது வழங்கப்படும் அதிக பட்சக் கடன் தொகை ரூபாய் பத்தாயிரம் என்றிருப்பதை இருபதாயிரமாக உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போதிருந்து?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே, இது கிணற்றை ஆழப்படுத்துவதற்கு அதிகமான பணம் கொடுக்கலாமா என்பது பற்றிய கேள்வி. ஏற்கெனவே, இப்படிப் பணம் அதிக மாகக் கொடுப்பதிலே பல புகார்கள் வந்து, இப்படி வாங்கும் பணத்திலுல் பல சீர்கேடுகள் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டு, அதன் காரணமாக இது ரிசர்வ் பாங்குக்கு தெரிவிக்கப்பட்டு, ரிசர்வ் பாங்க் அதற்காக ஒரு தனிக் குழுவை அனுப்பியது. அவர்கள்